1970 செப்டம்பர் 9]

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) தற்சமயம் இம்மாதிரி கருத்து அரசின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கதர் சிட்டங்களுக்கான விலை

***336 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க கதர் உற்பத்தி நிலையங்களில் கதர் சிட்டங்கள் எந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றன?

(இ) கதர் சிட்டங்கள் கொள்முதல் செய்யும் விதங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் ஏதாவது இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்திவரும் கதர் உற்பத்தி நிலையங்களில், நூற்பதற்காகக் கொடுக்கப்படும் 1 கிலோ எடையுள்ள பஞ்சுக்கு பொதுவாக 30 மெட்ரிக் சிட்டங்கள் பெறப்படுகின்றன.

(இ) இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: அரசிடமிருந்து வாங்கப்படும் நூலுக்கு என்ன விலை? அம்பர் நூலுக்கு என்ன விலை? கைராட்டைச் சிட்டம் நூலுக்கு என்ன விலை? கட்டாயமாகப் பஞ்சு வாங்கவேண்டும் என்று அந்தத் துறை வற்புறுத்துகிறது. அதை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா? மேலும், அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் ஒரே சமயத்தில் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பணிகள் முழுவதையும் உள்ளடக்கிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அம்பர் சர்க்காவின் நூல் விலை 35 காசு; கிஸான் ராட்டை சிட்டத்திற்கு 50 காசு. 20 சதவிகிதம் கையடைத் தொகையாகச் சரிக்கட்டப்படுகிறது. கதர் துணியாகத் தரப்படுகிறது. சென்ற ஆண்டில் கோவை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டிருந்ததன் காரணமாக 20 சதவிகிதம் என்பது 10 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டது. 5--7--1969 முதல் 4--1--1970 வரை ஆறுமாத காலத்திற்கு வேறு மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு, வைப்புத் தொகை அதிகப்படுத்தப்பட்டு ஊதியத்தை மிச்சப்படுத்த ஊக்கம் அளிக்கப்பட்டது. கிசான் ராட்டைகளை, டெக்ஸ்டூல் ராட்டைகளுக்கு மாற்றுவதால், கதர் உற்பத்தி அதிகமாகி, மேலும் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இந்தக் கதர் சிட்டங்களை உற்பத்திசெய்ய ஏழை எளிய அரிசனங்களுக்கு ராட்டைகளை இலவசமாகக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா.முத்துசாமி : கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தனியாக இயங்கும் அகில இந்திய அமைப்பு. அது பணத்தைக் கொடுக்கிறது, மானியமாகவும், கடனாகவும். அந்த வாரியம் இந்தவிதமான உதவி கொடுப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூற்கும் நூலும், அம்பர் ராட்டை நூலும் வித்தியாசமாக இருக்கிறது. இரண்டையும் கலந்து கதர் நெய்வதால், தரம் குறைகிறது. தரம் உயர, வலிவு அதிகமாக, கிசான் ராட்டைகளையே கொண்டுவருவதன் மூலம் கதர் உற்பத்தி செய்கிற சிறு தொழில் நசிக்காமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது ஒரு தவறான கருத்து. உற்பத்தி செய்வது மேலும் அதிகமாகும். பலருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். கிசான் ராட்டை மூலம் நூற்பதைவிட டெக்ஸ்டூல் ராட்டை மூலம் நூற்பதில் மூன்று மடங்கு அதிகமாக ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. வேலை அதிகரிக்க, மார்க்கெட்டில் போட்டி போட, நாம் புதுமைகளைக் கையாள வேண்டியதாக இருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி

337 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் நிர்வாக குழுவில் அந்த வங்கியின் ஊழியர் ஒருவரை பிரதிநிதியாக சேர்க்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகக் குழுவில் அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவரை நியமிப்பது வங்கிக்கு வசதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் யோசனை செய்து சேர்த்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அப்படி ஊழியர்களை நியமிப்பதற்கு சட்டத்திலும் விதிகளிலும் இடம் இல்லை.

Tirunelveli District Co-operative Society, Tuticorin

* 338 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Joint Registrar of Co-operative Societies, Tirunelveli had addressed in June 1968 the President of the Tirunelveli District Co-operative Society Limited, Tuticorin to take action on grave financial irregularities in its working; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இந்தச் சங்கத்தின் தலைவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இது நீதி விசாரணையில் உள்ளது.